☎ 04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES
## ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

### சண்முகா தொழிற்சாலை கலை மற்றும் அறிவியல் கல்லூரி
### தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
### திங்கள் கருத்தரங்கம் - தொடக்கவிழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை சார்பில் தமிழ்த்துறை மாணவர்களுக்கான திங்கள் கருத்தரங்கத் தொடக்க விழா 28-09-2022 அன்று கல்லூரி வளாகத்திலுள்ள கருத்தரங்க அறையில் நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் திரு **டி.ஏ.எஸ்.முத்து** அவர்கள் கலந்துகொண்டு தலைமையுரை வழங்கினார். கல்லூரியின் பொருளாளர் திரு **எஸ்.சீனுவாசன்** அவர்கள் முன்னிலை வகித்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** அவர்கள், தமிழ்த்துறையைச் சார்ந்த மாணவர்கள் தம் பல்வகைத் திறமைகளை வளர்த்துக்கொண்டு பல்துறை வித்தகர்களாகத் திகழவேண்டும் என்று மாணவர்களை ஊக்கப்படுத்திச் சிறப்பாகச் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் கல்விப் புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** அவர்களும் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** அவர்களும் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாகத் தமிழ்த்துறையின் தலைவர் பேரா. கு. **இளங்கோவன்** அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாணவ- மாணவிகள் கவிதை, கட்டுரை, பேச்சு, பாட்டு எனத் தத்தம் தனித்திறமைகளை வெளிப்படுத்தினர். இறுதியில் இளங்கலை இரண்டாமாண்டு மாணவி **ச.சிம்ரன்** நன்றியுரை ஆற்றினார். நிகழ்வை முதுகலை இரண்டாமாண்டு மாணவி **சி.பவித்ரா** தொகுத்துவழங்கினார். இக்கருத்தரங்கைத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

செயலர் மற்றும் தாளாளர்

